## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக்கலைமாணித் தேர்வு – பகுதி – I – 1999/2000 (ஜனவரி -2004)
## (வெளிவாரி)

## GEO – 202 வளங்களும் பாதுகாப்பும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**உலக புறவரிப்படம், இலங்கைப் புறவரிப்படம் என்பன வழங்கப்படும்.**
**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

01. மூலவளம் என்பதனை எவ்வாறு வரைவிலக்கணம் செய்வீர் ? அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை உதாரணமாகக் கொண்டு மூலவளங்களைப் பேணிப்பாதுகாத்தலின் முக்கியத்துவம் பற்றி விளக்கிக் கூறுக.

02. புதுப்பிக்கக்கூடிய மூலவளங்கள், புதுப்பிக்க முடியாத மூலவளங்கள் ஆகிய பதங்களிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? புதுப்பிக்கக்கூடிய மூலவளங்களப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கான புதிய தொழில் நுட்பங்களினது தேவை பற்றி விளக்குக.

03. தென்கிழக்காசியாவில் காட்டுவளம் குறைவடைவதும் அதன் விளைவுகளும் பற்றி சுருக்கமான புவியியல் கட்டுரை ஒன்று வரைக.

04. மாற்று வலு வளங்களை இனங்கண்டு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படும் வலுவள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இம்மாற்று வலுவளங்கள் பயன்படுத்தப்படவேண்டியதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

05. இலங்கை குடிவரைவியல் நிலைமாறு கட்டத்தின் மூன்றாம் கட்டத்தினை அடைந்துவிட்டது.
நாட்டின் குடித்தொகை வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டி இதனை விளக்குக.

06. உலக கடல் வளங்களது பரம்பல் பாங்குகளை விபரித்து கடல் வளம் அழிவடைவதற்குப் பொறுப்பான காரணிகளையும் விளக்குக.

07. "நீர் வளம் பெறுமதிமிக்கதோர் வளமாகையால் அதனைப் பேணிப்பாதுகாத்தல் அவசியமானதாகும்".
இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) அறிவு படைத்த மனித வளம்
(ஆ) நிலைபேண் அபிவிருத்தியின் அவசியம்
(இ) இலங்கையில் நன்னீர் வளம்
(ஈ) முருகைக்கல் அகழ்வும், கரையோரப் பாதிப்பும்

*************